உ

ஸ்ரீராஜராஜேஸ்வரி அம்பாள் துணை

மன்னார் உப்புக்குளம்

# ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள்



# திருவூஞ்சல்

எச்சரிக்கை - பராக்கு - லாலி - மங்களம்

இஃது

மன்னார் செல்வம் பிரதர்ஸ் ஸ்தாபனத்தாரால்

கும்பாபிஷேக வெளியீடாக வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் துணை

மன்னார் – உப்புக்குளம்

# ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் திருவூஞ்சல்

(எச்சரிக்கை - பராக்கு – லாலி - மங்களம்)

இயற்றியவர்:

''இயலிசை வாரிதி''

''கவிமாமணி''

''ஸாஹித்ய மாமணி''

''ஸாஹித்ய லஹரி''

''ஸாஹித்ய சிரோமணி''

''ஸாஹித்ய ஸாஹரம்''

''சிருஷ்டி கலாபானு''

யாழ்ப்பாணம் (இணுவில்)

**பிரம்மஸ்ரீ மா. த. ந. வீரமணி ஐயர் அவர்கள்**

இஃது

**மன்னார் செல்வம் பிரதர்ஸ்**

ஸ்தாபனத்தாரால்

கும்பாபிஷேக தினத்தன்று

வெளியிடப்பெற்றது.

19-8-1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

# ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய ஸ்வாமிகள்

# ஆசியுரை

சைவ செம்மனச் செல்வர்களே!

மன்னூர் உப்புக்குளம் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாளுக்கு திருவூஞ்சல் அந்தாதிக் கீர்த்தனைகள் யாத்து அவள் திருவடிகளில் சமர்ப்பிப்பது பெரும் கைங்கரியம். அழியாது நிலைத்து நிற்கும் அரும்பெரும் பொக்கிஷம். தாயன்புக்கு இணை ஏது. எமது பிழைகளை எல்லாம் பொறுத்துக் காத்தருளும் கருணாம்பிகை, வேண்டும் சம்பத்துக்களை எல்லாம் ஈந்தருளும் தேவியின் பாதகமலங்களை இறுகப் பற்றினோர்க்கு ஒரு குறையும் நேரிடாது. பராசக்தியின் கடாட்சம் பெற்று வீடுபேறு எய்திய மகான்களின் சரிதைகள் இதற்குச் சான்று பகரும். பக்திவளம், இசைக்கேற்ற சந்த அமைப்பு, சொற்சுவை, பொருட்சுவை ஆதியன பொதிந்து மிளிர இவ்வூஞ்சற் பாக்களை யாத்து அளித்த கவிமாமணி பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் அவர்கள் பாராட்டுக்குரியவர். இவ் அம்பாளின் தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் செவ்வனே நிறைவுறத் தொண்டுகள் புரிந்து ஆக்கமும், ஊக்கமும் அளித்த அன்பர்கள் அனைவரையும் பாராட்டுகிறோம். பராசக்தியின் துணைவேண்டி எல்லோருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளை வழங்குகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வாழ்த்துரை

எங்கும் பரந்து நிற்கும் இறை சக்தியை மந்திரங்கள் மூலம் உருவத் திருமேனியில் ஆவாகனம் செய்து (எழுந்தருளச் செய்து) அவ்வுருவத் திருமேனியை பிரதிஷ்டை செய்து வழிபடும் இடம் ஆலயமாகும். ஆன்மாவானது லயிக்கின்ற இடமான ஆலயமானது சிற்ப சாஸ்திரங்களுக்கு அமைய அமைக்கப்பட்டு பிரதிஷ்டா கும்பாபிஷேகம் செய்யப்பட்டு உருவத் திருமேனியில் இறைவனை ஆவாகனம் செய்த பின்னர், முறைப்படி வேதநூல் கற்றுணர்ந்த வேதியர்களால் செய்யப்படுகின்ற நித்திய, நைமித்திய பூசைகளினால் கருவறையிலுள்ள உருவத் திருமேனியிலிருந்து இறைசக்தியின் அருள் அடியார்களை வந்தடைந்துகொண்டிருக்கும். புனிதக் குறைவினாலும், பூசைகளில் ஏற்படும் குறைகளினாலும் உருவத் திருமேனியில் உள்ள சக்தி குறைவதற்குச் சந்தர்ப்பம் இருப்பதனால்தான் ''12 வருடங்களுக்கு ஒருதடவை கும்பாபிஷேகம் செய்ய வேண்டும்'' என்பது விதியாகவுள்ளது.

இந்த வகையில் மன்னார் உப்புக்குளம் இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயக் கட்டிடம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு 19-8-1988ம் திகதியன்று புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் செய்யப்படும் நன்னாளில் இராஜராஜேஸ்வரி அம்பாள் திருவூஞ்சற் பாடல் அம்பாளின் பாதக்கமலத்தில் அர்ப்பணம் செய்யப்படுவது பெரு மகிழ்ச்சிக்குரியதாகும்.

தவிர்க்க முடியாத காரணங்களினால் இவ்வாலய கும்பாபிஷேகத்தை முன்னிட்டு 'கும்பாபிஷேக மலர்' ஒன்றை வெளியிட முடியாத குறையானது; கவிமாமணி பிரம்மஸ்ரீ மா. த. ந. வீரமணிஐயர் அவர்களினால் இயற்றப்பட்ட ஊஞ்சற் பாடல்களும், அந்தாதிக் கீர்த்தனைகளும் அடங்கிய இந்நூல் வெளியீட்டினால் நிவர்த்தி செய்யப்படுகின்றது.

"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது''

எனும் பொய்யாமொழிக்கு இணங்க, இந்நூலினை வெளியிடுகின்றதால் பெருமையும் அருளும் பெற்றுக்கொள்கின்ற "செல்வம் பிறதர்ஸ்'' நிறுவனத்தாரை வாழ்த்தி அவர்களது ஆலயத் தொண்டு மேன்மேலும் சிறக்கவும், இந்நூலினைப் படிப்போர்க்கு இன்னருள் செய்யவும் இராஜராஜேஸ்வரி அம்பாளைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சக்தி! சக்தி! சக்தி!

கூ. அ. உ. ஆணையாளர் அலுவலகம்
மன்னார்

கெ. தவராசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## மன்னார் உப்புக்குளம் சித்திவிநாயகர் ஆலய, ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய பிரதமகுரு அவர்களின்

# ஆசியுரை

1875ம் ஆண்டுக்கு முன்பிருந்தே வழிபடப்பெற்றுவரும் மன்னார் உப்புக்குளம் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் உள்ள அம்பாளின் அனுக்கிரகத்தால் சகல செல்வங்களையும் பெற்று வாழும் மன்னார் மக்களின் பெரு முயற்சியினால் 1941ம் ஆண்டு பிரதிஷ்டா கும்பாபிஷேகம் நடைபெற்ற பின்னர் 1988ம் ஆண்டு திரும்பவும் மக்களின் பெருமுயற்சியினால் ஆலயம் புதுப்பிக்கப்பெற்று புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் நடைபெற்றுக் கொண்டு இருக்கும் இவ்வேளையில் அதாவது நாட்டின் சுபீட்சத்தின் மூலம் மக்கள் நல்வாழ்வு பெறும் இம்முகூர்த்தத்தில் இராஜராஜேஸ்வரி அம்பாளின் திருவூஞ்சல் பாடல் அரங்கேற்றம் பெற்று அம்பாளின் பாதகமலத்தில் சமர்ப்பிக்கின்ற இவ்வேளையில் ஆசியுரை வழங்குவதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இத்திருவூஞ்சல் பாடல்மூலம் நாட்டிற்கும் மன்னார் வாழ் மக்களுக்கும் வர்த்தகப் பெருமக்களுக்கும் நல்வாழ்வு கிடைக்க சகல செல்வங்களையும் வழங்கும் அம்பாளை வேண்டுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் துணை

மன்னார் — உப்புக்குளம்

# ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள்

# திருவூஞ்சல்

## காப்பு

பூந்தமிழும் புகழ்சைவம் பொலிந்து ஓங்கும்
புகழ்பூத்த தமிழீழ மன்னார் நாட்டில்
காந்தமிகு கவின்உப்புக் குளத்த லத்தில்
கருணைபொழி இராஜரா ஜேஸ்வ ரித்தாய்
சாந்தமுடன் இனிதமர்ந்தே ஊஞ்ச லாடச்
செந்தமிழின் திருவூஞ்சல் தன்னைப் பாட
வேந்தனுப்புக் குளச்சித்தி விநாய கன்தாள்
வியனுலகில் என்றென்றும் காப்ப தாமே.

## நூல்

மறைநான்கும் பொற்பவளக் கால்க ளாக
மாமறையின் ஆகமமே விட்ட மாக
நிறைவான கலைஞானம் வடங்க ளாக
நிமலியின் ஸ்ரீசக்ரம் பீட மாக
உறைஞானத் திருவூஞ்சல் தனிலே வைகி
உவந்தருளைச் செய்கின்ற அன்னை நீயே!
இறைமன்னார்த் தலவுப்புக் குளத்து மேவும்
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 1

நால்மார்க்கப் பக்தியெனும் கால்நி றுத்தி
நடுவயிர விட்டமதாய்ப் புலன்கள் சேர்த்து
நூல்போற்று நாற்கரண வடங்கள் மாட்டி
நுவலுதிரு வருளென்ற பலகை தேக்கி
மால்போற்றும் பேரின்ப ஊஞ்சல் மீதே
பக்குவமாய்ச் சீவாத்மா ஆட ருள்செய்
பால்மன்னார்த் தலவுப்புக் குளத்து மேவும்
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழல்சூடும் பொன்முடியும் பூவும் ஆடக்
குண்டலங்கள் திருச்செவியில் குழைந்தே ஆட
விழியாடும் கருணையொடு அருளும் ஆட
விற்புருவ மாடச்செந் திலக மாடக்
குழிமேவும் கன்னங்கள் நகையு மாடக்
குறைதீர்க்கும் அபயமொடு வரத மாட
எழில்மன்னூர்த் தலவுப்புக் குளத்து மேவும்
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 3

பரனுட அரியாடப் பிரம னுடப்
பாற்கடல்சத் தியலோகம் கைலை ஆடச்
சிரமாட முடிகளாட மணிக ளாடச்
சந்திரனின் சூரியனின் அணிகளாட
வரமீனும் கருணைக்கண் கடையு மாட
வாரணனும் நாரணனும் குகனு மாடத்
திரைமன்னூர்த் தலவுப்புக் குளத்து மேவும்
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 4

பொன்னணியாம் மங்கலநாண் மார்பில் ஆடப்
பூமாலை ஆடமணி வடங்க ளாடப்
புன்னகையின் இதழாடப் புருவ மாடப்
பூக்கின்ற கருணையெழில் நயன மாடக்
கன்னலது ஏந்தும்பொற் கரங்க ளாடக்
கலசகரம் வரதமொடு அபய மாட
நன்மன்னூர்த் தலவுப்புக் குளத்து மேவும்
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல். 5

பாம்பணிகள் சுழன்றாடப் பதக்க மாடப்
பட்டாடைச் செஞ்சேலை இசைந்தே யாட
ஆம்பலருள் விழியிரண்டும் அழகாய் ஆட
அண்டசரா சரமாட அகிலம் ஆட
கூம்புமடி யவர்கரமும் சிரமேல் ஆடக்
குழலாடக் கழலாடச் சிலம்பு மாடத்
தோம்புமன்னூர்த் தலவுப்புக் குளத்து மேவும்
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல்.

இந்திரனூர் சந்திரனூர் கவரிவீச
இரவிப்பரிதி ஆலவட்டம் தன்னைத் தூக்க
நந்தியொடு பிருங்கிஇசை முழவு கொட்ட
நாமகளும் வீணையொலி நயந்தே மீட்டச் 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்திருவும் திருமாலும் பரத மாடச்
செங்கரும்பு கலசமொடு மாலை ஆட
விந்தைமன்னூர்த் தலவுப்புக் குளத்து மேவும்
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல். 7

முன்னம்மகி டாசூரன் தன்னைக் கொன்றே
முன்னின்றே தேவர்தமைக் காத்த செல்வி!
கன்னலொடு கலசமதைக் கையி லேந்திக்
கர்ச்சிக்கும் சிங்கமதில் அமரும் தாயே!
வன்னவெழில் வடிவழகீ வரதீ தேவீ!
வண்டாடும் மலர்க்குழலீ வனஜ மாலீ!
இன்மன்னூர்த் தலவுப்புக் குளத்து மேவும்
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல். 8

கதியென்றே அடியருமுன் கழலை நாடிக்
காசினியில் தொழவருளும் தேவி நீயே!
மதியரவும் புனைந்திடுவோய் மகிழ்ந்த ருள்செய்
மாதாவும் நீயன்றோ மஹேஸ் வரியே!
நிதியாவும் தரும்தாயே நிமலி நீயே!
நீலாய தாக்ஷியுமா தேவி மாயே
பதிமன்னூர்த் தலவுப்புக் குளத்து மேவும்
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல். 9

செந்திருவாம் இலக்குமியோர் வடந்தொட் டாட்டச்
செழுங்கலையின் வாணியுமோர் வடந்தொட் டாட்டப்
புந்திமகிழ்ந் தரம்பையரோர் வடந்தொட் டாட்டப்
புளகங்கொள் அடியருமோர் வடந்தொட் டாட்ட
நந்திமுழ வதிரவயன் தாளம் போட
நாரணனும் குழலிசைக்க நாரி பாட
கந்தமன்னூர்த் தலவுப்புக் குளத்து மேவும்
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல். 10

ஞாயிறுவும் திங்கள்வெண் குடைக ளேந்த
ஞாலச்செவ் வாய்அரம்பை கானம் பாடத்
தாயினும் அன்பு தன்னைச் சொரிந்த ருள்செய்
தண்உமையே விடையியாளன் பூணும் தேவீ!
மாயிமக மாரிவெள்ளிப் பனிம லையில்
மகிழ்ந்த மர்ந்தே ஆசனிக்கும் மாதா நீயே
தோயுமன்னூர்த் தலவுப்புக் குளத்து மேவும்
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல். 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்குழலி காமாக்ஷி ஆடீர் ஊஞ்சல்
கயிலாய நாயகியே ஆடீர் ஊஞ்சல்
தார்மலரின் மார்பழகீ ஆடீர் ஊஞ்சல்
தளிர்க்கரும்பின் செங்கரத்தோய் ஆடீர் ஊஞ்சல்
கூர்மிகுந்த வாட்படையோய் ஆடீர் ஊஞ்சல்
கோமளம னோஹரியே ஆடீர் ஊஞ்சல்
ஊர்மன்னார்த் தலவுப்புக் குளத்து மேவும்
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 12

## (வாழி)

அந்தணராம் வேதியரும் ஆனும் வாழி!
அவுணராம் வானவரும் மாரி வாழி!
தந்திடுநல் அரசின்செங் கோலும் வாழி!
தையலார் கற்புநெறி ஞானம் வாழி!
செந்தமிழ்க் கலைகல்வி சிறந்து வாழி!
சீரடியர் யாவருமே வாழி! வாழி!!
நந்தமிழூர் மன்னரும் வாழி! வாழி!!
இராஜரா ஜேஸ்வரியும் வாழி! வாழி!!

## எச்சரிக்கை

1. கனகேஸ்வரி ஜெகதீஸ்வரி மாயே எச்ச ரிக்கை
கபாலீச்வரன் மனமோஹினி நீயே எச்ச ரிக்கை
தன ஸ்ரீராஜ ராஜேஸ்வரி தாயே எச்ச ரிக்கை
தரணீதனில் அருள்மாநிதி தருவோய் எச்ச ரிக்கை.

2. பொன்னார்மேனிப் பெம்மான்சிவன் சக்தீ எச்ச ரிக்கை
பொலிபூரணி அரநாயகி முத்தீ எச்ச ரிக்கை
மன்னார்ப் பதி உப்புக்குளத் தலத்தோய் எச்ச ரிக்கை
மாயேராஜ ராஜேஸ்வரி தேவி எச்ச ரிக்கை

3. அரிசோதரி பரமேஸ்வரி கமலீ எச்ச ரிக்கை
அகிலாண்டிடும் லோகேஸ்வரி அமலீ எச்ச ரிக்கை
அரிமாமீதில் அமர்ந்தேவரும் காளீ எச்ச ரிக்கை
அரசீராஜ ராஜேஸ்வரி அம்மா எச்ச ரிக்கை.

4. வரமே தரும் ஜெகதீஸ்வரி தேவீ எச்ச ரிக்கை
வனிதாமணி கருணாகரி தாயே எச்ச ரிக்கை
புரமாவுப்புக் குளவாஸினி மாரி எச்ச ரிக்கை
பதிமன்னார்ராஜ ராஜேஸ்வரி தாயே எச்ச ரிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பராக்கு

1. பராபரையே பார்வதியே தேவி பராக்கு
பரமசிவன் நாயகியே முத்தி பராக்கு
சுராசுரரும் போற்றிசெய்யும் சக்தி பராக்கு
சுகுணகுண சேகரியே கௌரீ பராக்கு

2. அராவணியைப் பூண்பவளே அரசி பராக்கு
ஆனந்த பைரவியே அம்மா பராக்கு
தராதலத்தில் மன்னூர் வாழ்வே பராக்கு
தாரணியில் உப்புக்குளந் தேவி பராக்கு

3. பார்கவியே சிவகௌரீ காளீ பராக்கு
பசும்மன்னூர்ப் பதியுறையும் மாரீ பராக்கு
வார்குழலீ வடிவாம்பா தாயே பராக்கு
வளவுப்புக் குளத்தலத்துத் தேவீ பராக்கு

4. அண்டசரா சரமீன்ற மாதா பராக்கு
அன்புருவாய் அருள்நல்கும் தாயே பராக்கு
கண்டவருக் கருள்நல்கும் தேவீ பராக்கு
கவினுப்புக் குளத்தலத்து ராஜீ பராக்கு.

## லாலி

1. ராஜரா ஜேஸ்வரிக்கு லாலி சுப லாலி
ராமஸ கோதரிக்கு லாலி சுப லாலி
தேசு நிறைந்தவர்க்கு லாலி சுப லாலி
தெய்வத் திருத்தாய்க்கு லாலி சுப லாலி

2. உப்புக்குளத் தேவிக்கு லாலி சுப லாலி
உமாதேவி அன்னைக்கு லாலி சுப லாலி
இப்புவியின் மாதாவுக்கு லாலி சுப லாலி
இராஜரா ஜேஸ்வரிக்கு லாலி சுப லாலி

3 அன்னையாம் அபிராமிக்கு லாலி சுப லாலி
அந்தரி சுந்தரிக்கு லாலி சுப லாலி
மன்னார்ப்பதி அன்னைக்கு லாலி சுப லாலி
மாதாம னோஹரிக்கு லாலி சுப லாலி

4. குங்குமம் அருள்பவர்க்கு லாலி சுப லாலி
கௌரியுமை அம்மைக்கு லாலி சுப லாலி
மங்களம் தருபவர்க்கு லாலி சுப லாலி
மாதா ராஜேஸ்வரிக்கு லாலி சுப லாலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்களம்

ராகம்: சுருட்டி **பல்லவி** தாளம்: ஆதி

இரர்ஜரா ஜேஸ்வரிக்கு ஜெயமங்களம் – என்றும்
இன்பத் தமிழ் மன்னருக்கும் சுபமங்களம்.

### சரணங்கள்

பராபரன் கேதீ சர்க்கும்
பார்வதி கௌரி யம்மைக்கும்
சுராசுரர் போற்றும் தெய்வ
சுப்பிர மணிய ருக்கும்

உப்புக் குளப்பிள்ளை யார்க்கும்
லோகமடு மாதா வுக்கும்
இப்புவியில் யாவருக்கும்
இனிய அடிய ருக்கும்

முகமது மலர்ந்த வர்க்கும்
முதுபள்ளி வாசலுக்கும்
அகமது குளிர்ந் தோர்க்கும்
அம்பிகை அடியருக்கும்

எங்ஙனுமே இன்பம்
இறைஞ்சும் ராஜேஸ் வரிக்கும்
மங்களம் தரும் எங்கள்
மாதா மனோஹரிக்கும்

---

**மன்னார் உப்புக்குளம்**
**ஸ்ரீ இராஜராஜேஸ்வரி**
**திருவூஞ்சல் முற்றும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் துணை

மன்னூர் — உப்புக்குளம்

# ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் அந்தாதிக் கீர்த்தனைகள்

இயற்றியவர்:

''இயலிசை வாரிதி''
''கவிமாமணி''
''ஸாஹித்ய மாமணி''
''ஸாஹித்ய லஹரி''
''ஸாஹித்ய சிரோமணி''
''ஸாஹித்ய ஸாஹரம்''
''சிருஷ்டி கலாபானு''

யாழ்ப்பாணம் (இணுவில்)

**பிரம்மஸ்ரீ மா. த. ந. வீரமணி ஐயர் அவர்கள்**

இஃது

**மன்னூர் செல்வம் பிரதர்ஸ்**

ஸ்தாபனத்தாரால்
கும்பாபிஷேக தினத்தன்று
வெளியிடப்பெற்றது.

19-8-1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார் — உப்புக்குளம்

# ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் அந்தாதிக் கீர்த்தனைகள்

## இராஜராஜேஸ்வரி

இராகம்: பிலஹரி | பல்லவி | தாளம்: ஆதி

ஸ்ரீ ராஜரா ஜேஸ்வரி - சங்கரி
கிரீடமணி மன்னார்
உப்புக்குளத் தேவி

**அனுபல்லவி**

திரிசக்தி மனோஹரி
திரிபுர சுந்தரி
கிரீடா விநோதினி
கிருபாகரீ ஆதரி

**சரணம்**

கலச ஹஸ்த வரத
அபயாம்பிகே அம்பா
நிலவிடும் மாங்கல்ய
நித்தில அலங்காரி
திலகக் குங்குமம் மஞ்சள்
திகழ அருளும் தேவீ
உலகெலாம் போற்றும் மன்னார்
உப்புக்குள வாஸினி.

## உப்புக்குள வாஸினி

இராகம்: நன்யாஸி | பல்லவி | தாளம்: ஆதி

உப்புக்குள வாஸினி
உமாதேவி சுபாஷினி
இப்புவியில் மன்னார்ப்பதி
இராஜரா ஜேஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அனுபல்லவி

செப்ப அரிய அருள்
செய்திடும் பூரணி
அப்பன் அம்பலத் தையன்
அணைத்திடும் மோஹினி

### சரணம்

மஹாமேருச் சக்கரத்தில்
மகிழ்ந் துறையும் தேவீ
மகிஷனைக் கொன்ற சுரர்
மமதை தொலைத்த நீலி
விகார அரிமா ஏறி
விளங்கும் பயங்கரி
சிகாமணி சிவகாமி
சிருங்கார நாயகி.

## மன்னும் உப்புக்குள மன்னூர்ப்பதித்தேவி

இராகம்: பிருந்தாவனஸாரங்கா **பல்லவி** தாளம்: ஆதி

சிருங்கார நாயகியாம்
சித்ரூபி பதம் நாடு
பெரும் பாபம் அணுகாதே
பேரின்பம் தருவாளே.

### அனுபல்லவி

மருந்தான சிவசக்தி
மன்னுபவப் பிணி தீர்ப்பாள்
பிருந்தாவன ஸாரங்கன்
பிரிய ஸகோதரி.

### சரணம்

இன்னல்கள் தீர்த்திடுவாள்
இராஜ ராஜேஸ்வரி
கன்னல் கலசமொடு
கரும்புவில் ஏந்திடுவாள்
மன்னும் உப்புக்குள
மன்னூர்ப்பதித் தேவி
வன்ன மலரடிகள்
வண்டமிழில் பாடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்டலம் தனில் மன்னுர் உப்புக்குள மாதா

இராகம்: காமவர்த்தனி **பல்லவி** தாளம்: ஆதி

வண்டமிழ் பாடுவாய் மனமே – பக்தியாய்
கண்டவர்க் கருள் செய்யும்
காமவர்த் தனியை

### அனுபல்லவி

அண்டரும் போற்றிடும்
அகிலாண் டேஸ்வரி
மண்டலம் தனில் மன்னுர்
மகிழ் உப்புக்குள அன்னையை

### சரணம்

இகமதில் அருள் தரும்
இராஜ ராஜேஸ்வரி
அகமதிலே என்றென்றும்
ஆனந்தமாய் ஆதரி
புலரும் அருள் மிகும்
புவனேஸ் வரித் தேவி
செகமதில் அருள் மழை
சொரிந்திடுவாள் கருணை.

## இன்பமெலாம் இறைஞ்சும் இராஜராஜேஸ்வரி

இராகம்: காபி **பல்லவி** தாளம்: ஆதி

சொரிந்திடுவாள் கருணை
வழங்கிடுவாள் அருளை
புரந்தரி உப்புக்குள
புனித ராஜேஸ்வரி

### அனுபல்லவி

பரந்த மனத்தழகி
பார்வதி ஈஸ்வரி
சுரந்திடுவாள் இன்பம்
சுகுண மனோஹரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சரணம்**

இன்பமெல்லாம் இறைஞ்சும்
இராஜரா ஜேஸ்வரி
துன்பமெல்லாம் அகற்றும்
துர்க்காம்பிகே மாரி
நன்பதுமக் கழல்கள்
நாளும் துதித்திடுவாய்
உன்பவம் தீர்த்து என்றும்
உவந்தருள்வாள் ஆசி

## நிகரில்லா உப்புக்குளம் நிறை ராஜராஜேஸ்வரி

இராகம்: கல்யாணி **பல்லவி** தாளம்: ஆதி

மகிழ்ந்தருள்வாள் ஆசி
மகேஸ்வரி உல்லாசி
மகிஷனை வதம் செய்த
மர்த்தனி நர்த்தனி

**அனுபல்லவி**

புகழ்மிகுந் தோங்கிடும்
புண்ணிய மன்னாரில்
நிகரில்லா உப்புக்குளம்
நிறைராஜ ராஜேஸ்வரி

**சரணம்**

மஞ்சளும் குங்கும
மாங்கல்ய பூரணி
தஞ்சமடை பவர்க்கு
தண்ணருள் தரும் ஆரணி
நெஞ்சமதில் நிறைந்த
நித்திய கல்யாணி
கஞ்ச மலரடிகள்
கருணைபுரி தாரணி

## திருவளர் மன்னாரில் திகழ்ராஜராஜேஸ்வரி

இராகம்: பெஹாக் **பல்லவி** தாளம்: ஆதி

கருணைபுரியும் தாரிணி — ஆரணி
திருவளர் மன்னாரில்
திகழ்ராஜ ராஜேஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அனுபல்லவி

அருளை அள்ளி அள்ளி
அடியவர்க்கே அருளும்
திரிபுர சுந்தரி
தீனதயா பரி

### சரணம்

அன்னைராஜ ராஜேஸ்வரி
அடிமலர்ப் பாதம்பணி
உன்னைத் தீவினையேதும்
உலகில் அணுகாதே
வன்னச் சிங்கவாஹினி
வாராகி வைஷ்ணவி
மன்னும் மன்னார் வளர்
மாதங்கி உமாதேவி.

## பூதலமீதில் மன்னார் புனித உப்புக்குள அன்னை

இராகம் கரஹரப்ரியா பல்லவி தாளம்; ஆதி

மாதங்கி உமாதேவி
மன்னார்ராஜ ராஜேஸ்வரி
பாதகமலம் தொழுவாய் – நெஞ்சே

### அனுபல்லவி

பூதலமீதில் மன்னார்
புனித உப்புக்குளத்தில்
மாதவமென அமர்ந்தே
மகிழ்ந்தருளும் அன்னை

### சரணம்

சிவசக்தி அபிராமி
சின்மய ஸ்வரூபிணி
பவநாச காரணி
பார்வதி திரிசூலி
கவலைகள் தீர்த்திடும்
காமாக்ஷி மீனாக்ஷி
நவசக்தி பாதமே
நாளும் துதிப்பாய் நெஞ்சே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுந்தரி பதி மன்னூர்ச் சுமங்கலி

இராகம்: பாகேஸ்ரீ　　பல்லவி　　தாளம்: ஆதி

சிந்தை குளிர்ந்து வாழ்வில்
சேவடி பாடுவாய்
வந்திடுவாள் அருள்
தந்திடுவாள் ராஜேஸ்வரி

### அனுபல்லவி

சுந்தரிபதி மன்னூர்ச்
சுமங்கலி ராஜேஸ்வரி
வந்தமர்ந்தருள் செய்யும்
வடிவாம்பிகை கௌரி

### சரணம்

பக்தி வடத்திலே
பாமலர் மாலைகட்டி
நித்தியமும் மாதா
நீழலில் சூட்டிடுவாய்
சக்தி அபிராமி
சித்தியெல்லாம் தருவாள்
முத்திதரும் சித்தி
மங்கள நாயகி.

## மங்கள நாயகி

இராகம்: சுருட்டி　　பல்லவி　　தாளம்: ஆதி

மங்களநாயகி மாதங்கி - அவள்
மன்னூர் உப்புக்குள
இராஜ ராஜேஸ்வரி

### அனுபல்லவி

பங்கஜப் பாதம் அருள்
பர்வத வர்த்தனி
செங்கமலக் கண்ணி
செங்கரும்பு ஏந்தும்கௌரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சரணம்**

பக்தருக்கருள் தரும்
பார்வதி பார்க்கவி
சித்தமதில் நிறையும்
சித்ரூபி சிவகாமி
சத்து சித்தானந்த
தத்துவ ரூபிணி
சித்தியெல்லாம் தரும்
சிவசக்தி அபிராமி.

''சுபம்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

இவ்வூஞ்சற் பாக்களையும், அந்தாதிக் கீர்த்தனைகளையும் இயற்றி அருளிச்செய்த கவிமாமணி பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் அவர்களுக்கும் இவ்வூஞ்சற் பாக்களை இவ்வாலயத்தில் சமர்ப்பிப்பதற்கு அனுமதி வழங்கிய ஆலய நிர்வாகஸ்தர்களுக்கும் ஆசியுரை, வாழ்த்துரை வழங்கியவர்களுக்கும், இப் புத்தகத்தைச் சிறந்தமுறையில் அச்சிட்டுத் தந்த சாந்தி அச்சக ஸ்தாபனத்தாருக்கும், அம்பாள் அடியார்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**செல்வம் பிறதர்ஸ்**
பெரியகடை-மன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org